446

# TAMIL NADU POLLUTION CONTROL BOARD

## PRESS RELEASE

The MoEF&CC, GoI issued Notification dated 22nd August 2022 on **"The Battery Waste Management Rules, 2022"** . It includes Lead Acid batteries, and present scenario E-vehicle batteries as used and/or end of life battery.The notification implies that the Rules are mainly applicable to Producer, dealer, consumer, entities involved in collection, segregation, transportation, re-furbishment and recycling of Waste Battery. The notification states the responsibility like Environmentally Sound Management, Extended Producer Responsibility and facility for handling and processing of the waste battery.

As per the notification Producer shall register and get Extended Producer Responsibility (EPR) Certificate from the Central Pollution Control Board through the "Centralised Online Portal" . Like wise Recycler and Refurbisher shall also register with State Pollution Control Board through the "Centralised Online Portal". The said notification also mentioned in Schedule-II, setting EPR targets which include the collection targets and 100% recycling and/or refurbishment of EPR collection target of the respective year.

Producer will meet their Extended Producer Responsibility obligation through the Extended ProducerResponsibility certificate made available by recycler or refurbisher. In case of non-availability of Extended Producer Responsibility certificates with recyclers or refurbishes, the Producer shall have the responsibility of collection as well.

Public Waste Management authorities - (Village Panchayat, Municipal Corporation, Municipality and agencies engaged on their behalf) shall ensure that the waste battery collected will be handed over to the producers or agencies acting on their behalf or entities involved in Recycling and/or Refurbishment.

The notification also have provision to levy Environmental Compensation for non compliance of Rules if any by entities carrying out activities without registration as mandated under these rules etc.

The Tamil Nadu Pollution Control Board issues this press release informing the latest notification of "The Battery Waste Management Rules, 2022" for compliance.

For Chairperson

2/9/22

No. 76, MOUNT SALAI, GUINDY, CHENNAI - 600 032.
Tel : 044-22353134 - 139 Fax : 044-22353068
Email : tnpcb-chn@gov.in Web : tnpcb.gov.in

செய்தி வெளியீடு

# TAMIL NADU POLLUTION CONTROL BOARD

செய்தி வெளியீடு

சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகம், இந்திய அரசாங்கம், 22 ஆகஸ்ட் 2022 அன்று பேட்டரி கழிவு மேலாண்மை விதிகள், 2022 பற்றிய அறிவிப்பை வெளியிட்டது. இதில் பயன்படுத்தப்பட்ட மற்றும் ஆயுட்காலம் முடிவடைந்த காரீய அமில (Lead-Acid) பேட்டரிகள் மற்றும் தற்போதைய வரவான மின்னனு-வாகன (E-Vehicle) பேட்டரிகள் ஆகியவை அடங்கும். இந்த விதிகள் முக்கியமாக உற்பத்தியாளர், வியாபாரி, நுகர்வோர், பேட்டரி கழிவுகளை சேகரிப்போர், பிரித்தெடுப்போர், இடமாற்றம் செய்வோர், மறுசீரமைப்போர் மற்றும் மறுசுழற்சி செய்வோர் ஆகியோர்களுக்குப் பொருந்தும்.

சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் பேட்டரி கழிவு மேலாண்மை, விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு மற்றும் கழிவு பேட்டரியை கையாளுதல் மற்றும் செயலாக்குவதற்கான வசதி போன்ற பொறுப்புகளை அறிவிப்பில் கூறுகிறது

பேட்டரி கழிவு மேலாண்மை விதிகள், 2022-ன் படி பேட்டரி உற்பத்தியாளர்கள் மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்திடம் "மையப்படுத்தப்பட்ட நிகழ்நிலை இணைய முகப்பு"(Centralised Online portal) வழியாக பதிவு செய்து நீட்டிக்கப்பட்ட உற்பதியாளர் பொறுப்பு (EPR) சான்றிதழை பெற வேண்டும். இதேபோல் பேட்டரி கழிவுகளை மறுசீரமைப்போர் மற்றும் மறுசுழற்சி செய்வோர் ஆகியோர் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திடம் "மையப்படுத்தப்பட்ட நிகழ்நிலை இணைய முகப்பு"(Centralised Online portal) வழியாக பதிவு செய்ய வேண்டும். பேட்டரி கழிவு மேலாண்மை விதிகள், 2022-ன் படி நீட்டிக்கப்பட்ட உற்பதியாளர் பொறுப்பு (EPR) இலக்கு என்பது உற்பத்தி செய்யப்பட்ட கழிவு பேட்டரிகளை சேகரிப்பது மற்றும் அந்தந்த ஆண்டின் நீட்டிக்கப்பட்ட உற்பதியாளர் பொறுப்பு (EPR) சேகரிப்பு இலக்கின் 100% மறுசுழற்சி மற்றும்/அல்லது புதுப்பித்தல் இலக்கு என அட்டவணை-II குறிப்பிடுகிறது.

மறுசுழற்சி செய்பவர் அல்லது புதுப்பிப்பவர் மூலம் கிடைக்கும் நீட்டிக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்புச் சான்றிதழ் மூலம் உற்பத்தியாளர்கள் அவர்களின் விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்புக் கடமையை நிறைவேற்றுவார். மறுசுழற்சி செய்பவர்களிடமோ அல்லது புதுப்பித்தவர்களிடமோ நீட்டிக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்புச் சான்றிதழ்கள் கிடைக்காத பட்சத்தில், தயாரிப்பாளரிடம் சேகரிப்புப் பொறுப்பும் இருக்கும்.

பொதுக் கழிவு மேலாண்மை அதிகாரிகள்(கிராம பஞ்சாயத்து, நகராட்சிகள் மற்றும் அவர்கள் சார்பாக செயல்படும் நிறுவனங்கள்) சேகரிக்கப்பட்ட கழிவு பேட்டரிகளை, உற்பத்தியாளர்கள் அல்லது அவர்கள் சார்பாக செயல்படும் நிறுவனங்கள் அல்லது மறுசுழற்சி மற்றும்/அல்லது புதுப்பித்தலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

பேட்டரி கழிவு மேலாண்மை விதிகள், 2022-ன் படி இவ்விதிகளுக்குட்பட்டு செயல்படாத உற்பத்தியாளர், மறுசீரமைப்போர் மற்றும் மறுசுழற்சி செய்வோர்களுக்கு சுற்றுச்சூழல் இழப்பீடு விதிக்க இவ்விதியானது வழிவகை செய்கிறது.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இந்த செய்திக்குறிப்பை சமீபத்திய அறிவிப்பான "பேட்டரி கழிவு மேலாண்மை விதிகள், 2022"-ஐ அமல்படுத்தும் நோக்கதிற்காக வெளியிடுகிறது.

தலைவருக்காக

7/9/22

No. 76, MOUNT SALAI, GUINDY, CHENNAI - 600 032.
Tel : 044-22353134 - 139 Fax : 044-22353068
Email : tnpcb-chn@gov.in Web : tnpcb.gov.in